
# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவராண்டு 2013
வைகாசி 2
றஜப் 21
ஞாயிறு (16-5-1982)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 97
☎ 8164
விலை ரூபா 2.00


## இந்த இதழில்...


"சிங்களவர்களுடன் உடன்படிக்கைகள் எழுதி மீண்டும் ஒருமுறை ஏமாறுவதற்கு த.வி.கூ. தயாராக இல்லை" திரும்பிப பார். —அமிர் —பக்கம் 6.

அமிரின் செங்கதிர் தமிழினத்தின் வரலாற்றைப் பதினைந்து ஆண்டுகள் பின்தள்ள முயல்கிறது! —பக்கம் 6

தந்தையின் கொள்கை காப்பதே கடமை— —அரசியல் மடல் —பக்கம் 3.

நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே சுதந்திரன் கண்டனத்தின் பாரம்பரியம்பற்றிய விளக்கம் —பக்கம் 2

தந்தை செல்வா நினைவாலயம் கூட்டணியின் குடும்பச் சொத்தா? —பக்கம் 7.


விமலராசாவை விடுதலை செய் —பக்கம் 5.

சிறிகாந்தன் மீது அமிர் தாக்கு. —பக்கம் 5.

தமிழீழ விடுதலைக்காக ஒற்றைக்காலில் நிற்போரின் கொட்டம் அடக்கப் படவேண்டும் -அமிர் —பக்கம் 4

சுதந்திரனுக்கு எதிராக அமிர் யுத்தப்பிரகடனம்- —பக்கம் 4

ஆணைக் குழுக்களா? அனுப்பும் குழுக்களா? —எண்ணம் பக்கம் 4.


## தமிழீழப்போராளிகளை கொன்றெழிக்காதே

### சிறீலங்கா தூதரகத்தின்முன் பிரான்ஸ்தமிழர் உண்ணாவிரதம்!

சிறீலங்காஅரசின் அடக்குமுறைகளையும் அநீதிகளையும் சித்திரவதைகளையும் எதிர்த்து பிரெஞ்சு நாட்டில் வாழும் தமிழர்கள் 10-5-82 இல் உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பாரிசில் உள்ள ஆங்கிள் அஸ்ரேக் றெக்கியூபென் எனும் இடத்தில், ஸ்ரீலங்கா தூதரகத்தின் முன்பு காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் ஏராளமான தமிழர்கள் பங்கு கொண்டனர். பின்வரும் சுலோக அட்டைகளுடன் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

சிங்கள ஏகாதிபத்தியமே!
★ பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அகற்று!
★ சிறையில் விசாரணையின்றி அடைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை விடுதலை செய்!

> **பகிஷ்கரித்த மாணவர்கள் 16 பேர் கைது!**
> —பக்கம 8.

★ தமிழீழ விடுதலைப் போராளிகளைக் கொலைசெய்வதை நிறுத்து!
★ அப்பாவித் தமிழ்இளைஞர்களைச் சித்திரவதைசெய்யாதே!
★ தமிழீழ மக்களின் உடைமைகள் சூறையாடப்படுவதை நிறுத்து!
★ தமிழீழ மண்ணிலிருந்து ஸ்ரீலங்கா ராணுவமே வெளியேறு!

ஆகிய கோரிக்கைகளைமுன் வைத்து பிரான்ஸ் தமிழர் இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த உண்ணாவிரதம் நடைபெற்றது.

உண்ணாவிரத முடிவில் ஸ்ரீலங்கா தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## கூட்டணியின் புதிய கோஷம்

# மாநில சுயாட்சியா?

## தமிழீழ விடுதலைக் கொள்கைக்கு குழிபறிக்கப்பட்டுவிட்டதா?

### யாழ் அபிவிருத்திச் சபைத் தலைவரின் 'கொள்கைப் பிரகடனம்' ஏற்படுத்தியுள்ள குமுறல்!

சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற சோசலிசத்தமிழீழ அரசைமீள்வித்துப் புனரமைப்பதையே தனது அடிப்படைக் கொள்கையாகக்கொண்டுஅதற்கே தமிழ்மக்களின் ஏகோபித்தஆணையையும்1977 இல்பெற்றுக் கொண்ட தமிழர்விடுதலைக் கூட்டணி, அக்கொள்கையை படிப்படியாகக் காற்றில் பறக்க விட்டு விட்டதா?

இவ்வாறான கேள்விகள் தமிழீழ விடுதலை விரும்பிகளிடையே இன்று பெரும் குமுறலாக வெடித்துள்ளன,

இதற்குக் காரணம்தமிழர் விடுதலைக் கூட்டணியின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளதும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும், கூட்டணியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் பத்துப் பேரையும் கொண்ட யாழ் அபிவிருத்திச்சபையின் கொள்கைப் பிரகடன அறிக்கையில் முதல் பந்தியிலேயே இடம் பெற்றுள்ள கருத்துக்கள்-தாம்

அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு- சு. நடராசாவினல் படிக்கப்பட்ட கொள்கைப் பிரகடன அறிக்கையில் இடம்பெற்றுள்ளகுறிப்பிட்டபகுதிவருமாறு:—

'யாழ்ப்பாண மக்களாகியநாம், எமது மாநில சுயாட்சிக் கோரிக்கையினையிட்டுமிகத் தீவிரமாகக் குரலெழுப்பிவந்துள்ளோம். ஆட்சியில் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது நாடு முழு

—8-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரன் வாசகர்களிடம் விடைபெறுகிறார் கோவை

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் சுதந்திர ஆசிரியராகிய என்னை சிறைக்கனுப்பப் போவதாக ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கம்பகிரங்கமாக எச்சரித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் பிரதமர் என்னைச் சிறைக்கு அனுப்பினலும் சரி, அல்லது ஸ்ரீ லங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் என்னைச் சிறைக்கு அனுப்பினலும் சரி, தமிழீழத்துக்காக அத்தண்டனைகளை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன். சிறைக்கு என்னை ஸ்ரீ லங்கா எதிர்க்கட்சித் தலைவர் ஒருவேளை அனுப்பிவைப்பாராஞல்— அதற்கு முன் சுதந்திரனின் அன்பு வாசகர்களிடமிருந்து முன்கூட்டியே விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

அன்பன்
கோவை மகேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே!

காகம் கறுப்பு
குயிலும் கறுப்பே
பேதம் யாதோ?
வசந்தம் வந்ததும்
காகம் கத்தும்
குயிலோ கூவும்.

இது வடமொழியில்உள்ள ஒரு பாடல். ஆனால், வசந்தம் வந்தாலும் செவிடர்களுக்கு இன்னிசை பாடும் குயிலுக்கும் சாக்குரல் எழுப்பும்காகத்துக்கும்பேதம்புரிவதில்லை.

தமிழீழ விடுதலை இயக்கத்தைப் பொறுத்தவரையில் ஏனைய ஏடுகள் காகம். சுதந்திரன் விடுதலைப் பண் இசைக்கும் கீதமினிய குயில், 'அறிந்தவன் அறிவான் அரியாலைப் பனாட்டை' என்ற யாழ் குடாநாட்டுப் பழமொழிக்கேற்ப விடுதலை இயக்கத்தின் சரணாகதியறியாத நெடும்பாதையைஅறிந்தவர்கள் சுதந்திரனின்இலட்சியத்தையும் பணியையும் நன்கு அறிவார்கள். பாராட்டினார்கள். பாராட்டுகிறார்கள். பாராட்டுவார்கள். சுதந்திரன் சுதந்திரப் பணியைத் தொடரும்.

ஆனால் சிங்களப் பேரினவாத அரசு சுதந்திரனை எப்படி நோக்கியது? 'நான் ஏன் கைதியானேன்?' என்ற கட்டுரையில்சுதந்திரன் ஆசிரியர் பின்வருமாறு விளக்குகிறார்:—

1958ஆம் ஆண்டு சுதந்திரனின் குரல்வளை அவசரகாலச் சட்டவிதிகளால்நசுக்கப்பட்டிருந்தது.

1961இல் சுதந்திரன் அவசரகால விதிகளின் கீழ்த் தடைசெய்யப்பட்டிருந்தது.

சுதந்திரன் குரலுக்கு— சுதந்திரன்எழுப்பும் தமிழின விடுதலை உணர்ச்சிக்கு— சிங்கள ஆட்சிபீடம் எத்துணை அஞ்சி நடுங்குகிறது என்பதற்குஇதுதக்க சான்றாக விளங்குகிறதல்லவா?

சுதந்திரனின் குரல்வளையை நசுக்குவதன் மூலம் சுதந்திரனின் செல்வாக்கையும் சுதந்திரனின் வளர்ச்சியையும் தடுத்து நிறுத்திச் சுதந்திரனை வெளிவராமற் செய்துவிடலாம் என்றுஇருதடவைகள் சிங்கள அரசு முயற்சியெடுத்துப் பார்த்தது.கிடைத்தது தோல்விதான்,

தமிழ் மக்கள்தரும் பேராதரவினால் சுதந்திரன் தன் பணியைத் தொடர்ந்தும் செய்துகொண்டேவருகிறது.

1958இலும் 1961 இலும் சுதந்திரன் பத்திரிகையைத் தடை செய்த அதிகாரவர்க்கத்தினர் 1971இல் சுதந்திரன் ஆசிரியரைக் கைதுசெய்தனர்,

—சுதந்திரன் 9.2.71

சிறையிலேசுதந்திரன் ஆசிரியரைச் சந்தித்த தந்தை செல்வா அவரை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

"நீங்கள் மிகப்பெரிய ஒரு கொள்கையை நிலைநாட்டுவதற்காகவே கஷ்டப்படுகிறீர்கள். எது வந்தாலும் மனந்தளர்ந்து விடாதீர்கள். உறுதியுடன் இருங்கள்"

—சுதந்திரன் 25.3-71

சுதந்திரன் 'தந்தையின் ஆணைப்படி இன்றும் பணியாற்றுகிறது.

1947இல் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசு சார்பில் தலைநிமிர்ந்துநின்றதலைவன் ஜீ.ஜீ பொன்னம்பலம் சுதந்திரனை ஆரம்பித்தார்.

1949இல் சுதந்திரன் கையைக் கடிப்பதை ஜீ ஜீ. உணர்ந்தார், அந்தச் சுமையை யாருடைய தலையிலாவது ஏற்றிவிட ஆலோசித்தார்கள், தந்தை செல்வாவிடம் ஒப்படைத்தால் ஏடு நிலைக்கும் என்று பலர் ஜீ-ஜீக்கு ஆலோசனை கூறினார்கள். தந்தை செல்வா ஏற்றுக்கொண்டார். ஆனால் நிபந்தனையிட்டார். அவரது நிபந்தனை இதுதான்,

'சுதந்திரன் கட்சிப்பத்திரிகையாக இயங்காது. அது தமிழின விடுதலைக்காக எழுதும் சுதந்திர ஏடாகவே இயங்கும்"

கம்பளிமூட்டையைவிட்டாற் போதும் என்று எண்ணிய ஜீ.ஜீ. சுதந்திரனைக் கைகழுவிவிட்டார். அதன் வழி தமிழினத்தின் தலைமையும் தம்மிடமிருந்து கை நழுவுகிறதுஎன்பதைஅப்போது அவர் உணரவில்லை.

மலையகத் தமிழர் பிரச்சினை மெல்ல மெல்லமாக வளர்ந்தது. 'தமிழனுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும்.பிரிந்து போகும்உரிமையுண்டு'என்று 1947 முதலே விடுதலை முழக்கம் செய்த தந்தை செல்வா டீ. எஸ். சேனநாயக்காவின்பயங்கரச் சதியை உணர்ந்து கொண்டார். ஜீஜீ, டீ. எஸ். இடம் சரணாகதி அடைந்து வருவதையும் உணர்ந்துகொண்டார். எனவே சதியைஅம்பலப்படுத்தினார். சுதந்திரன் மலையக மக்களின் விடுதலைக் குரலாக ஓங்கி ஒலித்தது.

'நான்தான் எல்லாம். எனது ஆணைக்கு அப்பால் எதுவும் நிகழாது' என்று எண்ணியிருந்தஜீ.ஜீக்குகாங்கிரசின் அங்கமான செல்வாவின் போக்கும்சுதந்திரனின் எழுத்தும் பேரதிர்ச்சியாகவும் பேரிடியாகவும் அமைந்தது.

அவர் உருத்திரமூர்த்தியானார்.

## 'I WILL BOMBARD SUTHANTHIRAN' —

'சுதந்திரனை நான் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பேன்'

என்று ஜீ-ஜீ- செல்வாமுன் நின்று கர்ச்சித்தார். 'மக்கள் ஆணையை மீற எமக்கு அதிகாரமில்லை, சுதந்திரன் சரியானதையே செய்கிறது. அதில் நான் தலையிட முடியாது'என்றுசெல்வா ஆணித்தரமாக ஆனால்அமைதியாக எடுத்துரைத்தார்.

தனது சோரம் போன கொள்கையை எடுத்துப் பரப்ப ஜீ,ஜீ ஒரு புதிய ஏட்டைத் தொடங்கவில்லை. சுதந்திரன் ஜீ-ஜீ-யின்சோரம் போன—மக்கள் ஆணையை மீறிய நடவடிக்கைகளைக் காரசாரமாகக் கண்டித்தது; ஆனால் செல்வா தீவிரமாகப் பேசவில்லை; அவர் அளவோடு தமது கண்டனத்தை வைத்துக் கொண்டார்;

திரு. பொன்னம்பலம் தேர்தல்காலத்தில் பல சவால்கள்விடுவது வழக்கம்தானே. திரு பொன்னம்பலம் சொல்லுக்கு அரிச்சந்திரன் என்பதையும் நாம்அறிவோம்.

1947இல் மலைநாட்டுத்தமிழர் சார்பாக எம்

### சுதந்திரன் பின்பற்றிவரும் பாரம்பரியம் இதுதான்!

மோடுகொடுத்த வாக்குப்பத்திரத்தை 1948 இல் திரு. டீ. எஸ். சேனநாயக்காவின் காலைப்பற்றிக் கொண்டபோது திரு. பொன்னம்பலம் கிழித்தெறிந்துவிட்டதை நாம்ஒருபோதும் மறவோம்'

என்று தந்தைசெல்வா ஜீ. ஜீயை நாகரிகமாகக்கண்டித்தார்.

1970இல் ஜீ-ஜீ. அரசியலிலிருந்து நிரந்தரமாக ஒதுங்கிக் கொண்டார். ஆனந்தசங்கரி, தியாகராசா. அருளம்பலம்,இந்துசாதனம்ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் ஆகியோர் பொன்னம்பலம் எங்கள் தலைவரல்ல! நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பிரதிநிதிகள் காங்கிரஸ்காரர் (Elected Representative Congress) ஸ்ரீமாவே எமது தலைவி' என்று கூறி ஜீ- ஜீ-யை அவமதித்தனர். உடுப்பிட்டி முன்னாள் பா.உ-மு-சிவசிதம்பரம் தலைமையிலானவர்களை நிராகரிக்கப்பட்ட காங்கிரசார் (Rejected Representative Congress) என்று கேலி செய்தனர். இந்நிலையில் செல்வா பழைய வரலாறுகளை மறந்து ஜீ,ஜியைநாடிச் சென்று 'தலைமை தாங்கு' என்று அழைத்தார்.

அரசியற் பண்பின் கொடுமுடியை அங்கு கண்டோம்.

1976இல் ஜீஜீ செல்வாவுடன் இணைந்து தமிழர் தலைவரானார். சுதந்திரனும் ஜீ-ஜீயின் புதிய பாதையை வரவேற்று எழுதியது. முடிசூடா மன்னராக1940களில் விளங்கிய ஜீ ஜீ மீண்டும் 1976முதல் முடிசூடாமன்னராக விளங்கி இவ்வுலகவாழ்வை நீத்தார்;

சிங்களஅரசின்ஆதிக்கபுரியினர் மட்டுமன்றி சுதந்திரனின் பிதாமகரானஜீ-ஜீ.யே சுதந்திரனைத் தாக்கியதையும் சுதந்திரன் அவரைத் தாக்கியதும் இறுதியில் ஜீஜீ.தமிழீழவிடுதலைக்கு உழைக்கும் தலைமையேற்றபோது சுதந்திரன்அவரைப் போற்றியதும்வரலாற்றுச் செய்திகளாகிவிட்டன.

ஜீ,ஜீ பொன்னம்பலம்மட்டுமல்ல தந்தை செல்வாவின் அரசியல் எதிரித் தமிழர்களான சுப்பையா நடேசன் (இறக்கும்வரை தந்தை செல்வாவைஎதிர்த்த) வானா பொன்னம்பலம், சுந்தரலிங்கம், குமாரசாமி தியாகராசா, அல்பிறெட் துரையப்பா, குட்டிப் பொன்னம், பலம், செயற்கை அமைச்சர் குமாரசூரியர், மு. சிவசிதம்பரம் ஆனந்தசங்கரி தா- சிவசிதம்பரம்,............ என்று நீண்டபட்டியலில் உள்ளோரெல்லாம் அரசின் அடிமைகளாகஏவலர்களாக இருந்தகாலத்தில் சுதந்திரனைத் திட்டத் தவறவில்லை; சுதந்திரனும் அவர்களை அம்பலப்படுத்தத் தவறவில்லை.

1971ஆம் ஆண்டு ஆனந்தசங்கரி ஸ்ரீமா தாசராக இருந்து தந்தை செல்வாவைத் திட்டியபோதும் தவறான பாதையில் சென்றபோதும் சுதந்திரன் அவரைக் கண்டிக்கத் தவறவில்லை; 1971ம் ஆண்டுபுரட்சிச்சதியில்கைது செய்யப்பட்ட இளைஞர்களுக்கான திறந்த சிறை கிளிநொச்சியில் அமைக்கப்படுவதை தந்தை செல்வா கண்டித்தார், 'ஆனந்த' சங்கரி கிளிநொச்சியின் அரசன் நான். எனது இராச்சியத்துள் அடங்கும் விடயம் பற்றிப்பேசச்செல்வாயார்?' என்று ஆட்சிமன்றில் ஆணவத்தோடுகேட்டார். தமிழ் பிரதேசம் ஒன்றுண்டா என்றும் கேட்டார். அப்போது சங்கரியைக் கண்டித்து சுதந்திரன் தலையங்கமே எண்ணம் (20-11 71) தீட்டியது.

இதனை மறந்து விடாதசங்கரி சுதந்திரனுக்கெதிராக— விடுதலைக்கு விரோதமாக— உதயசூரியனை உதிக்கச்செய்வதில்முன்னணியில்நின்றார். திரு. கிருஷ்ணராசாவின்நிதி முழுவதையும் உதயசூரியனுக்கு அள்ளிக் கொடுத்து சுதந்திரனை முறியடிக்கச்சதி செய்தார்.

மேலே பட்டியலிட்டுக் காட்டியவர்களில் மிகப்பலரை அன்றும் இன்றும் என்றும் 'சுதந்திரன்' தமிழர்களாகக் கருதியது கிடையாது அவர்கள் திட்டியபோது சுதந்திரன்அதுபற்றிக் கவலைப்பட்டதும் கிடையாது. அவர்களை அரசியல் அரங்கிலிருந்து நிரந்தரமாக அகற்றி விடுதலைப்பாதையைச் செப்பனிடுவதையே சுதந்திரன் பணியாகக் கொண்டுஇயங்கியது. திருத்தக் கூடியவர்களைத் திருத்தி இயக்கத்திற்கு அழைத்து வந்தது.

சிறைச்சாலையில் இருந்த சுதந்திரன் ஆசிரியரைத் தந்தை செல்வா பாராட்டியதையே மேலே கண்டோம். இச் செய்தி வெளியான அடுத்த வாரமே சுதந்திரன் தந்தை செல்வாவைத் தலைவராகக் கொண்ட தமிழரசுக்கட்சிப் பாராளுமன்றக் குழுவைக் கண்டித்துத் தலையங்கம்தீட்டியது. அதில்ஒருபகுதியைப் பாருங்கள்.

'சென்றவாரம் சமஷ்டித் திருத்தம் வாதிக்கப்பட்ட இறுதி நாளன்று தமிழரசுப் பா-உக்கள் பலர் கொஞ்சங்கூடப் பொறுப்பின்றி கடமை உணர்வு இன்றி நடந்துகொண்டிருப்பதை வேதனையோடு இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். வாக்கெடுப்பின்போது ஏழு பேரே சபையில் இருந்திருக்கிறார்கள்என்றால்அதைவிட வெட்கக்கேடு வேறென்ன இருக்கமுடியும். சபைக்கு வராத ஏனைய ஆறு பேரும் எங்கே என்னசெய்து கொண்டிருந்தார்கள்?...... இப்படி நடந்து கொண்டதற்காகத் தமிழரசுப் பா-உ.க்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழரசுப் பா-உக்கள் பலருக்கு நாம் இங்கு சுட்டிக்காட்டுவது கசப்பாக இருக்கலாம். ஆனால் நாம் தமிழ் பேசும்மக்களுக்குப் பதில் சொல்லக்கடமைப்பட்டவர்கள்...எம்மை நம்பி எமக்குப் பின்னால் தமிழரசுஇலட்சியத்தை நோக்கித் தியாகப்பாதையில்நடைபோடத் தயாராக இருக்கும் தமிழ் மக்களுக்கு நாம் பதில் சொல்லவேண்டும்.'

—எண்ணம், சுதந்திரன் 2-4.71

இவ்வாறுசுதந்திரன் அனல் பறக்கக் கண்டித்தபோது—

தந்தை செல்வா சுதந்திரனை மேடைமேடையாகக் கொண்டு சென்று படித்துக் காட்டி பாருங்கள் சுதந்திரனின் துரோகச் செயலை என்றுகுடம்குடமாகக் கண்ணீர் விடவில்லை;

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் கொள்கை காப்பதே கடமை!

அன்பு நண்பா,

தாழ்வுற்றுவறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்பாழ்பட்டு நின்றதாமோர் பழந் தமிழ் ஈழந்தன்னை வாழ்விக்க வந்துதித்த தமிழினத்தின் ஒரேயொரு தீர்க்கதரிசி—தமிழீழ நாட்டினத்தின் தேசியத்தந்தை—தமிழ்த்தாயின் அடிமைவிலங்கொடித்திட வந்துதித்த மகான்—முதறிஞர் அமரர் தந்தைசெல்வா நமக்குத் தந்துவிட்டுச் சென்றகொள்கைகளையும், அவர் தமிழினத்துக்கு ஊட்டி வளர்த்திட்ட வீர சுதந்திர உணர்வையும், உரிமை வேட்கையையும், போராட்ட உணர்வையும் தமிழ்மக்களிடத்திலே அழியவிடாமல் அந்த உணர்வுகளை ஊட்டி வளர்ப்பதிலே—தீட்டிக்கூராக்குவதிலே தமிழ் மக்களைத் தலைவணங்காச் சுயமரியாதை பாதையிலே அழைத்துச் செல்லும்புனிதப்பணியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

'தந்தை செல்வாயுகம் முடிவடைந்து விட்டது— என்றுகூறி, தந்தையின் பெயரையே தமிழர்களின் நெஞ்சிலிருந்து அழித்தொழித்து விடலாம் என்று உள்ளூர ஆசைப்பட்டவர்களுக்கெல்லாம்—தந்தை செல்வாவின் நினைவாலயத் திறப்பு விழாவையே எவ்வளவு தூரம் மட்டம்தட்டி அதைச் சிறிதாக்கிவிட முயன்று அதிலே மக்கள்காட்டிய எழுச்சியின் காரணமாக தோல்வியடைந்தவர்களுக்கெல்லாம்—இன்று தந்தையின் தீர்க்கதரிசன உரைகளை நாம் மீண்டும் மீண்டும் கூறும்போது வியர்த்துக்கொட்டுகிறது உள்ளூர! தந்தையின் கருத்துக்கள் அவர்களது இன்றைய ஒத்துழைப்பு சரணாகதிக்கு எதிர் வேட்டுக்களாக அமைகின்றன.

அவர்களது பத்திரிகையிலே அவர்களது தலைவர் சிறீலங்காவின் நாடாளுமன்றத்திலே ஆற்றிய உரை, 'உத்தியோக பூர்வமாகப்' பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நான் அதைத் துருவித் துருவிப்படித்தபோது, அங்கே தந்தை செல்வாவின் நாமம் எந்த ஓர் இடத்திலாவது உச்சரிக்கப் படவுமில்லை. 'சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிசத் தமிழீழ அரசு' என்ற தந்தையின் இறுதிக்கட்டளைச் சொற்றொடரையோ, தமிழ் மக்களின் ஆணையையோ காண முடியவில்லை. ஆனால் அமரர் திரு. பொன்னம்பலத்தின் பெயர் மட்டும் மறக்காமல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இன்றைக்குத் தேர்தல் நெருங்க நெருங்க, 'ஒற்றுமை' என்ற முழக்கம் அவர்களது மேடைகளிலே அளவுக்குமிஞ்சிவலியுறுத்தப்பட்டுவருவதையும், அதே அளவுக்குத் "சுதந்திரத் தமிழீழப் போராட்டம்" வலியுறுத்தப்படாதுபின் தள்ளப்பட்டு வருவதையும் நாம்காணக் கூடியதாயிருக்கிறது.

ஒற்றுமை அவசியம்தான்! ஆனால் ஒற்றுமைஎந்த அடிப்படையில்? எதனைச் சாதிப்பதற்கு என்ற கேள்விகளை நாம் எழுப்புகின்றோம். 1977 பொதுத்தேர்தலில்— 1979இல் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழீழ மக்கள் ஒற்றுமையுடன் தங்கள்வாக்குகளைக் கூட்டணிக்கே கொட்டினார்கள். இந்த ஒற்றுமை எப்படி ஏற்பட்டது? சுதந்திரத்தமிழீழம என்ற இலட்சியம் அனைவரையும் பின்னிப் பிணைத்தது. இந்த தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நோக்கி, தமிழர் விடுதலை கூட்டணித் தலைமை முன்னை எடுத்திருக்குமானால்— தமிழீழப்போராட்டத்துக்கு வலிவூட்டும் எதிர்ப்பு நடவடிக்கைகளில்ஈடுபட்டிருக்குமானால்— தமிழீழத் தேசிய மன்றத்தைக் கூட்டி தமிழீழ அரசியல் யாப்பை உருவாக்கும் பணியில் கூட்டணி கடந்த ஐந்தாண்டுகளாக விசுவாசத்துடன்... முனைப்புடன் ஈடுபட்டிருக்குமானால்— இன்னும் சொல்லப்போனால் தமிழ் மக்கள் கொடுத்த ஒரேயொரு ஆணையைப் பிரயோகித்திருக்குமானால்—இன்று ஒற்றுமை ஒற்றுமை என்று ஊரூராய் மேடைதோறும் கத்தித்திரிய வேண்டிய அவசியம் கூட்டணிக்கு ஏற்பட்டிராது. ஆனால் தமிழீழ விடுதலையை நோக்கி அவர்கள் ஓர் அடிகூட முன் வைக்காதது மட்டுமல்ல— தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைக் கூட அங்கீகரிக்கப்பிடிவாதமாகமறுத்து, தமிழீழப் போராளிகளைக் கொன்றொழித்தும், கொடூர சித்திரவதை செய்தும் வரும் சிறீலங்கா அரசின் கைப்பொம்மையாகி அபிவிருத்தி அற்பசலுகைகள், சமாதான நீதிவான் பட்டங்கள், உத்தியோகம் போன்றவற்றுக்காக மண்டியிட்டு, தமிழின விடுதலையின் பகைவர்களை—ஆக்கிரமிப்பாளர்களை மலர் மாலைசூட்டி மேளதாளத்துடன் வரவேற்கும் அளவுக்குப் படியிறங்கிவிட்டனர். சரணாகதியடைந்து விட்டனர்.

இதனால்தான் தமிழீழ விடுதலையை— தமிழீழ விடுதலையை மட்டுமே வேண்டி நிற்கும் கொள்கை வாதிகளும் (RADICALS) தீவிர வாதிகளும், கூட்டணியிலிருந்து ஒதுங்கினார்கள் வெளியேற்றப்பட்டார்கள், கூட்டணிக்குள் தனிமனித சர்வாதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது. சர்வாதிகாரம் ஒருபோதும் ஒற்றுமைக்குவித்திடப்போவதில்லை,

எனவே ஒற்றுமையென்று ஓலமிடுவோர்— ஒற்றுமையின் ஆதார சுருதியான தமிழீழ விடுதலையைக் கோட்டைவிட்டு விட்டார்கள்.




தமிழீழமக்களுக்குப்போராடுவதற்குசக்தியில்லையென்றும், நாம் வலிமை குறைந்தவர்கள் என்றும், மக்களை வீணே பலிகொடுக்கக் கூடாதென்றும் உலகில் எந்த விடுதலைத் தலைவனும் சொல்லாத—சொல்ல நினைக்காதகருத்துக்களையெல்லாம் தளபதிகள் என்று நாம்நம்பியிருந்தோர் இன்று கூறி—தமிழ் மக்களை மனோதத்துவ ரீதியிலே அடிமைத்தனத்துடன் இசைந்து போகும் நிலைக்கு கொண்டு செல்கிறார்கள் கூட்டணியின் பா.உக்கள்.

இவர்களுக்கு தந்தை செல்வா பதிலளிக்கிறார்—

"சுதந்திரம்வேறொருவர்கொடுக்க நாம் பெற்றுக்கொள்ளும்பொருளல்ல- அது சுக்குமல்ல மிளகுமல்ல; மக்களின் வீரத்தாலும், தியாகத்தினாலும், விடா முயற்சியினாலும், மக்கள் அடையும்ஓர் உன்னத நிலையே சுதந்திரம்; உலகசரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், சுதந்திரப் போராட்டம் நடத்திய எவ்வினமும், பலவீனமான நிலையிலேயேஇருந்தது என்பதுபுலப்படும். பலங்குறைந்த நேரத்திற்றானே ஓர் இனம் தன் சுதந்திரத்தை இழப்பது? அவ்விதம்இழந்த இனம், தன் பலவீன நிலையைப் பாராட்டிக் கொண்டு, சுயாதீனப் போரில் இறங்காமல் நிற்குமானால்— விடுதலை எப்போ அடையும்? விடுதலையடைந்த ஒவ்வொரு இனத்தின் சரித்திரத்தையும் ஆராய்ந்தால், அவ்வவ்வினம், தம் மனோதிடத்தினாலேயே வெற்றியடைந்தது. ஐரிஷ் மக்கள் தம்மிலும், பன்மடங்கு பலமிகுந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திடமிருந்து தம் சுதந்திரத்தைப் பிடுங்கிக்கொண்டார்கள். அம்பும், வில்லும் கூட ஆயுதமில்லாத இந்தியர், அதே ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து தம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டார்கள்."

(தமிழரசு வெள்ளி விழா மலர் பக்கம் 7)

"அடிமைத்தனத்திலிருக்கும் மக்கள், தங்கள் சுதந்திரத்தை அடைவதற்கு. இருஅம்சங்கள்ஒன்றுகஅமைய வேண்டும். ஒன்று அம்மக்களின் சுயாதீன வேட்கைப் பெருக்கமும், அதற்காகச் செய்யும் முயற்சியும். மற்றது உலக நடவடிக்கையால் வந்தேற்படும் சந்தர்ப்பம். எமக்கும் சுயாதீனமடைவதற்குச் சந்தர்ப்பம் வந்து சேரும் போது அச்சமயத்தை வெற்றித் தினமாக்குவதற்கு நாம் முழு ஆயத்தமாக இருக்க வேண்டும்."

—வெள்ளி விழா மலர் (பக்கம் 8)

"எமது கனவை நனவாக்குவதே எமது இயக்கத்தின் அடுத்ததிட்டமாகும். இவ்விஷயத்திலேபலரும்சந்தேகமுறுகின்றனர். துரதிருஷ்டவசமாக எமது சமீப காலத்திய அரசியல் வரலாறு இச்சந்தேகத்துக்கு இடமளிப்பதாயிருக்கிறது. பலமுறைகளில்தலைவர்கள் என்போர் எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். வீரர்களாகக் காட்சியளித்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்கள், ஒருநாள் நிமிர்ந்து நின்று போராடி, மறுநாள் களத்தையே விட்டு ஓடினர். அண்மையிலே நம் உரிமைகளுக்காக விட்டுக் கொடாது போராடி வந்த திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள், இப்பொழுது போராட்டத்தைக் கைவிட்டது மாத்திரமன்றி, இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வித குறையுமில்லையென்று எங்கும் பறை சாற்றி வருகிறார். இப்படியான குட்டிக்கரணங்களின்பயனாகத் தமிழினத்தின் பண்புக்கே பழுது வந்தடைந்து விட்டது. தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போர் தொடர்பாக தமிழ் மக்களுடைய அபிப்பிராயம் கோரப்பட்டபோதெல்லாம், உரிமைப் போரைத் தொடர்ந்துநடத்தவேண்டுமென்றே மக்கள் தீர்ப்பளித்தார்கள். தமிழ் மக்கள் என்றுமே தமது இலக்கினின்றும் பிறழவில்லை. வருங்காலத்திலும் அவர்கள் தமது இலக்கினின்றும் தவறமாட்டார்கள் என்ற பெரிய நம்பிக்கை எனக்கிருக்கிறது."

—வெள்ளி விழா மலர் (பக்கம் 7)

இவ்வாறு தமிழ் மக்களை நம்பி, அவர்களிடையே விடுதலை உணர்வையூட்டி, அந்தஉணர்வின் அடிப்படையில் அவர்களை ஒன்றுதிரட்டி, விடுதலைப் பாதையில் அவர்களைத் தந்தை செல்வா அழைத்துச் சென்றாரே தவிர—தேர்தலுக்குத் தேர்தல் மேடையிலேறி ஒற்றுமைக் கூச்சல் எழுப்பியவர் அல்லர் தந்தை செல்வா. டொனமூர் அரசியலமைப்பின்கீழான பொதுத் தேர்தல் 1931 இல் பகிஷ்கரிக்கப்பட்டது குறித்து தந்தை செல்வா பின்வருமாறு கூறுகிறார்—


"சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பேயில்லாது இத்தீவுக்கு ஓரளவுசுயாட்சி வழங்கிய முதல் அரசியற்றிட்டம், டொனமூர்த்திட்டமேயாகும். டொனமூர் அரசியற்றிட்டத்தின் கீழ் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலையாழ்ப்பாண மக்கள் பகிஷ்கரித்துவிட்டனர், ஏறக்குறைய நான்குஆண்டுகாலத்துக்கு அரசாங்கசபையில் யாழ்ப்பாணப் பிரதிநிதிகள்எவருமேஇருக்கவில்லை. இப்பகிஷ்காரம் அந்த அரசியற்றிட்டத்துக்குள்ள எதிர்ப்பையே பிரதிபலித்தது இந்தநாட்டின் அரசியல் வரலாற்றிலேயே இது ஒப்பற்ற சம்பவமாகும்."

என்று தேர்தல் பகிஷ்காரத்தை பாராட்டி வாழ்த்தி வரவேற்றவர் தந்தை செல்வா. 30 ஆண்டுகளாகத் தமிழினத்தை வழி நடத்தி—அறப்போர்கள் பல நடத்தி சிங்களத் தலைவர்களுடன் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் செய்து, சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி—இத்தகைய சத்தியசோதனைகளின்பின், தந்தை செல்வா என்ற தீர்க்கதரிசி எமக்கு இட்டுள்ள ஒரே கட்டளை—சுதந்திரத் தமிழீழத்தை மீட்பதற்காகப் போராடுங்கள்; அது ஒன்றே எம்மின மீட்சிக்கு வழியென்பதுதான்.

இப்புனிதமான கொள்கையையே அவர், சிங்கள நாடாளுமன்றத்தில் 1975 ஆம், 1976 ஆம் ஆண்டுகளில் ஊரறிய உலகறியப் பிரகடனம் செய்தார். இணைப்பாட்சிக் கோரிக்கையை கைவிட்டுவிட்டோம் என்றும் தெளிவாக அறிவித்தார். அத்தீர்க்கதரிசியின் தலைமையிலே தான் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அப்பெரியவரின்— புனிதரின் பொன்னடி போற்றி அவர் காட்டிய சத்தியவழியில்—விடுதலைப் பாதையில்நாம்சென்றுகொண்டேயிருப்போம், நாய்களும், நரிகளும் ஊளையிடட்டும்; ஒட்டகம் நகர்ந்து கொண்டேயிருக்கும்.

உன் அன்புத் தோழன்



**சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம் - தந்தைசெல்வா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுக்களா? அணைப்புக் குழுக்களா?

தமிழீழ நாட்டின்மீது அடாத்தாக ஆக்கிரமிப்பு நடாத்தியிருக்கும் சிறீலங்கா அரசாங்கம், தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், நெருக்கடிகள் எழும்போதெல்லாம், தான் நீதியாக நடப்பது போல உலகத்தின் கண்களுக்குக் காட்டிக்கொள்ள ஆணைக்குழுக்களையும் தெரிவுக்குழுக்களையும் நியமிப்பதை ஒரு சம்பிரதாயமாகக் கொண்டுள்ளது.

ஆணைக்குழு அல்லது தெரிகுழு நியமிக்கப்பட்டவுடன், தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கு தமிழ் மக்களின் ஆணைபெற்ற கூட்டணியும் அதை ஏற்று ஜீரணித்துக் கொண்டு அமைதியாகஆக்கிரமிப்பு அரசுடன் ஒத்துழைத்துவருகிறது.

சிறீலங்காவை இப்போதுஆட்சிபுரியும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர்- தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள்; கொலைகளை ஆராய்வதற்கு மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டன.

1- சன்சோனி ஆணைக்குழு. இது 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் செப்டம்பரில் இடம் பெற்ற இனக்கலவரம் சம்பந்தமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்டது.

2: 1979இல்யாழ்ப்பாணத்தில்அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தபோதுஅங்குஇடம் பெற்ற பொலீசாரின் அத்துமீறல்கள் (அதாவது இன்பம், செல்வம் கொலை, பாலேந்திரா, பரமேஸ்வரன், இராசேஸ்வரன், போன்றோர் பொலீசாரால் அழைத்துச் செல்லப்பட்டுக் 'காணமற் போனமை' ஆகியவை) சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு 1979 ஆகஸ்டில் கொழும்புப் பாராளுமன்றத்திலோர் தெரிவுக் குழு ஜனதிபதியின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்டது. இதில் த.வி.கூ சார்பில்அதன் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும் இடம் பெற்றிருக்கிறார்.

3. 1981இல் யாழ்ப்பாணத்தில் பொலீசாரால் எரியூட்டி அழிக்கப்பட்ட கட்டடங்களுக்கும் உடமைகளுக்கும், நூலகத்துக்கும் நட்டஈடு வழங்குவது சம்பந்தமாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க லயனல் குழு நியமிக்கப்பட்டது.

இம்மூன்று குழுக்களினலுங் கிடைத்த பெறுபேறுகள் என்ன?

சன்சோனி ஆணைக்குழு தனது அறிக்கையில் இனக்கலவரத்தினல் பாதிக்கப்பட்டசகலருக்கும் பூரண நட்டஈடு (Full Compensation) வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைசெய்தது. சன்சோனி ஆணைக்குழு பரிந்துரைசெய்து பல ஆண்டுகள் முடிவடைந்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை ஒரு சதமேனும் அரசினல் வழங்கப்படவில்லை. அதுபற்றி அரசு அக்கறை செலுத்தக்கூட இல்லை.

1979இல் நியமிக்கப்பட்ட இன்பம், செல்வம், மற்றும் இளைஞர்கள் கொலைசம்பந்தமாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிகுழு, யாழ்ப்பாணம் வந்தபோது அமைச்சர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள்விருந்துபோட்டதுதான் இதுவரைகண்ட ஒரேபலாபலன், பாராளுமன்றக்கட்டடம் மாற்றப்பட்டும் இன்னும் இத்தெரி குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை-இதுபற்றி"அம்னெஸ்டி இன்டர்நாஷனலும்" கவலைதெரிவித்துள்ளது. திரு. சிவசிதம்பரம் இன்னமும் அக்குழுவிலே இருந்துகொண்டிருக்கிறார்.இந்த உயிர்ப் பிரச்சினையிலே மூன்றண்டுகளாகியும் முடிவுஇல்லை.

## எண்ணம்

1981இல் தமிழினத்துக்கு எதிரானதாக்குதல் யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படையினரால் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அதேசமயம் அம்பாறை, இரத்தினபுரி, காவத்தை எஹலியகொடை, பலாங்கொடை நீர் கொழும்பு போன்ற பகுதிகளில் சிங்கள வெறியர்களின் காடைத்தனத்தினல், தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும்சொத்துக்களும்கற்பும்பறிக்கப்பட்டன. ஆயினும் யாழ்ப்பாண சம்பவங்கள் பற்றிஆராய்வதற்கு மட்டுமே லயனல்குழுநியமிக்கப்பட்டது,

லயனல் குழு பாரபட்சமற்ற முறையில் நட்டஈடு சம்பந்தமாகத் தனது பரிந்துரையை ஜனதிபதியிடம் சமர்ப்பித்திருந்தும்இதுவரை நட்டஈடுவழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எரியூட்டப்பட்ட யாழ்ப்பாணநூலகத்துக்கு ஒருகோடிரூபாநட்டஈடுவழங்கப்பட வேண்டுமென லயனல்குழுபரிந்துரைசெய்திருந்தும் பத்து இலட்சம் ரூபா மட்டுமே அரசினல் இதுவரை ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழினத்தை ஏறிமிதிக்கும்ஆக்கிரமிப்புஅரசிடமிருந்துநட்டஈடோநீதியோ கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதும், ஆணைக்குழுக்களையும் தெரிகுழுக்களையோஎதிர்பார்த்திருப்பதும் வீண்வேலை என்பதையும், இழப்புக்களையும்,நட்டங்களையும்ஏற்றுத்தாங்கிக்கொண்டு தமிழ் மக்கள்தமிழீழவிடுதலையைநிலைநாட்டும் நடவடிக்கைகளில் ஒய்வு ஒழிச்சலின்றி இறங்கவேண்டும் என்பதையும் இந்த இடத்திலே தமிழ்மக்களுக்குச் சுட்டிக் காட்டவிரும்புகிறோம்.

இப்போதுமற்றோர் நெஞ்சைப் பிழிய வைக்கும் செய்தி. பண்டத்தரிப்பில் தேநீர்க் கடைவைத்திருந்த இளைஞரான கனககுலசிங்கம் என்பவர் கடந்த ஜனவரிமாதம் கைது செய்யப்பட்டார். இவர் சம்பந்தமான ஆட்கொணர்வு மனு நீதிமன்றத்தில் விசாரிக்கப் பட்டபோது, இவர் எங்கே தடுத்து வைக்கப் பட்டுள்ளார் என்பதை பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து அறிந்துகூறுவதற்குமூன்றுமுறை அவகாசம் கேட்ட அரச சட்டத்தரணி இறுதியில் அவரை இராணுவம் கைதுசெய்தஅன்றே விடுதலை செய்து விட்டதாகக் கூறியுள்ளார்.

ஆனல் கனககுல சிங்கத்தையோ காணவில்லை.அவர்தனதுவீட்டுக்குசென்றதாகஇல்லை.ஒருவரைக்கைது செய்யும் இராணுவஅதிகாரிகளோ,பொலீசாரோ அவரைவிடுதலை செய்தால், மறுபடியும் அவரைஅவரதுவீட்டில்கொண்டுசென்று ஒப்படைத்திருக்கவேண்டும்.இதுவே சரியான செயலாகும்.

மனித உரிமைகளுக்கு சவால் விடும் திகிலூட்டும் மர்ம நிகழ்ச்சியாக இது அமைந்துள்ளது. கனககுலசிங்கம் இறந்திருந்தால்அவரது உடலைஅவரதுஉறவினர்களிடம்ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு- அ. அமிர்தலிங்கம்நாடாளுமன்றத்திலே கோரியுள்ளார்-

இதுபாரதூரமான மனித உரிமைப் பிரச்சினை. இதில் 'வேண்டுகோள்' மட்டும் பயன்தரப்போவதில்லை. நீதியைக் கோரி ஒரு பொதுமக்கள் இயக்கம்நடத்தப்பட வேண்டும். கனககுலசிங்கத்துக்கு என்ன நடந்ததுஎன்றமர்மம் அம்பலமாக்கப்பட வேண்டும். இல்லாவிடின், கனககுல சிங்கத்தின் பிரச்சினை, கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் எதிர்காலத்தில்ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கிறோம்.

## சுதந்திரனுக்கு எதிராக அமிர் யுத்தப் பிரகடனம்!

"எது எப்படியிருந்தாலும், கோவைமகேசன் நெருப்புடன் விளையாடுகிறர் என்பதை மறந்து விடக்கூடாது. பொய்யும், புரட்டும் வெகுநாட்களுக்கு நிலைக்க மாட்டா. பேச்சுபேச்சென்று ஏதோவெல்லாம் பேசும் கிளி பெரும் பூனையைக் கண்டவுடன், 'கீச்கீச்' என்று கத்துமாம், யுத்தத்தைநிறுத்துவதற்குஎதிர் அணியுத்தத்திற்குத் தயார் ஆவது போல, சுதந்திரனின்பொய்யையும், புரட்டையும் முறியடிப்பதற்கு நாமும் புறப்பட்டுவிட்டோம்."

—செங்கதிர் வெளியீட்டு விழாவில் அமிர்.

(தினபதி 12.5.82)

## தமிழீழ விடுதலைக்காக ஒற்றைக் காலில் நிற்போரின் கொட்டம் அடக்கப்பட வேண்டும்

—அமிர்

"ஒருநாள் வானம் மப்பும் மந்தாரமுமாக இருப்பதைக்கண்ட சிட்டுக்குருவியொன்று "ஐயோ வானம் இடிந்து விழப்போகிறதே; என்றுஒற்றைக்காலையும் தூக்கிக்கொண்டுஇடிந்து விழப்போகும் வானத்தைப் பிடிப்பதற்கு தயாராக நின்றதாம்.அதுபோலத்தான்சிலதம்பிமாரும், "ஐயோ தமிழீழ விடுதலையைக் கொண்டுவந்தாக வேண்டுமே" என்று ஒற்றைக் காலைத் தூக்கிக்கொண்டு நிற்கின்றனர். இவர்களது கொட்டங்கள் அடக்கப்படவேண்டும்.

—செங்கதிர் வெளியீட்டு விழாவில் திரு. அமிர்தலிங்கம் (9.5.82)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் அபிவிருத்தி சபைத் தலைவர் நடராசா மீது கூட்டணி ஏடு — தாக்கு?

அண்மையில் நீதியமைச்சர் நிசங்கா விஜயரத்தின கிளிநொச்சிக்குஹெலிகொப்டரில் வருகை தந்தபோது. யாழ் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு- நடராசா. கிளிநொச்சி பா.உ. திரு.வி. ஆனந்தசங்கரி ஆகியோர் அமைச்சருக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றனர்,

(வீரகேசரி செய்தி)

★

ஆளவந்தார்க்கு ஆலவட்டம் பிடித்தவர்கள் ஆடம்பர அரசியல் வாழ்வுவாழ்வதாக மயங்கி, மடிந்ததை மக்கள் அறிவார்கள்.

—செங்கதிர் (9-5-82)

## இரண்டு செய்திகள்

காணிப்பங்கீடு, காணிக் குடியேற்றம் உட்பட15அதிகாரங்கள் மாவட்ட அபிவிருத்திச் சபையிடம் இருக்கின்றன; இதன்மூலம் தமிழ் மண்ணைக் காப்போம்.

—த.வி, கூட்டணியினரின் மேடைமுழக்கம்.

"மதுறுஓயாத்திட்டத்தின் கீழ் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணி, இன்னும் சில ஆண்டுகளில்மட்டக்களப்பு. கல்குடாத் தொகுதியில்பறி போகப்போகிறது.

—அமிர்தலிங்கம் (ஈழநாடு 11.5,82)

## தமிழர் எவருமிலர்

பொலீஸ்துறையில் மே முதல் திகதியிலிருந்து 12 பேருக்கு ஏ-எஸ்-பி. பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது- இவ்வாறுபதவிஉயர்வு வழங்கப்பட்ட 12 பேரும்சிங்களவர்களே- இவர்களில் தமிழரோ,முஸ்லிமோஎவருமிலர் என்பது குறிப்பிடத்தக்கது-

## சிறீகாந்தன் மீது அமிர் தாக்கு!

"அமெரிக்க நாட்டுப் பிரஜையொருவரால் அங்கு சுதந்திர ஈழப் பிரகடனம் செய்யப்பட்டு அதை வங்கியின் சங்கிலியால் போட்டுப் பூட்டிவைத்துவிட்டு, நாங்கள் சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்று கூறுவதில் எதுவித அர்த்தமும் இல்லை"

—அ- அமிர்தலிங்கம் (ஈழநாடு 12-5-82)

# விமலராசாவை விடுதலை செய்!

## தமிழ் மாணவ மாணவியர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்!

387நாட்களாகவிசாரணையோ விடுதலையோ இன்றிபணுகொடைஇராணுவமுகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவன் விமலராசாவை விடுதலை செய்யக் கோரி பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தையும் மாணவ, மாணவியர் 12,13,14 ஆம் திகதிகளில் பகிஷ்கரித்தனர்.

இப்பகிஷ்கரிப்பில்யாழ்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 2200 மாணவமாணவியரும் கலந்துகொண்டனர்.

இதையொட்டி யாழ் பல்கலைக்கழக மாணவர் அவையின் சார்பில் திரு. இராசநாயகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;-

பயங்கரவாத தடைச் சட்டம் என்ற போர்வையில் தமிழ் மாணவர்களையும் இளைஞர்களையும் கைது செய்து இராணுவ முகாம்களில் சித்திரவதை செய்வதைஉடன் நிறுத்தி விமலராசாவைவிடுதலை செய்.

இரவிரவாக கைதுசெய்து கொலை செய்வதாலும் சித்திரவதை செய்வதாலும் தமிழ் மாணவர்கள் நிம்மதியாக வாழ முடியாதுள்ளது. எனவே உடன்—

★ விமலராசாவை விடுதலை செய்

★ படிக்க வசதிகள் செய்துகொடு

★ பரீட்சைவசதிசெய்து கொடு

★ சித்திரவதையை உடன் நிறுத்து

இக்கோரிக்கைகளை வென்றெடுக்கவும் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் இராணுவ பயங்கரவாதத்தை உலகுக்கு எடுத்துக் காட்டவும் பல்கலைக்கழகமாணவர்கள் பாடசாலைமாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் தனியார் கல்லூரிமாணவர்கள்அனைவரும் மே14ல் தங்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்து போராட்டத்தைமுன்னெடுப்போம்.

"தமிழ் மாணவரே ஒன்று சேர்ந்து தகர்த்தெறிவோம் அடக்குமுறையை"

387 நாட்கள் விசாரணையின்றி இராணுவ முகாமில் சிறைவைக்கப்பட்டு துன்புறுத்தப்படும் மாணவன் விமலராசாவை விடுதலை செய்யப் போராடுவோம்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனாகிய இவர் 24/4/81 அன்று அதிகாலை4மணிக்குஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு இன்றுவரைவிசாரணை எதுவுமின்றிஅடைத்துவைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்றபோர்வையில் இன்றைய பேரினவாத யு. என்.பி. ஆட்சி எமது இளைஞர்களை இரவிரவாக கைது செய்து இராணுவ முகாம்களில் வைத்துபயங்கரசித்திரவதை செய்வதையும்கொலை செய்வதையும் எதிர்த்துப் போராட ஒரணி திரள்வீர்.

இன்று விமலராசாவுக்கு நாளை............?

### கொழும்பு பல்கலைக் கழகத்திலும் பகிஷ்கரிப்பு!

விமலராஜாவை விடுதலை செய்யக்கோரி கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களும், 13ஆம், 14ஆம்திகதிகளில் தமது விரிவுரைகளைப் ப்கிஷ்கரித்தார்கள். என்று கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் பெர்ணண்டோ தந்தி மூலம் சுதந்திரனுக்கு அறிவித்துள்ளார்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு பல்கலைக் கழகம் 14ம் திகதி விரிவுரைகளைபகிஷ்கரிப்பதாகமாணவ மன்றங்கள் அறிவித்து உள்ளன.

மட்டக்களப்பு பல்கலைக் கழக கல்லூரி கிழக்குமாகாண பாடசாலைகளை பொறுப்பேற்று பகிஷ்கரிப்பில் ஈபபடுத்துகிறது.

# கோவை,ஈழவேந்தனுடன் அமெரிக்க தூதர் சந்திப்பு!

## அரசியல் பிரிவு செயலாளருடன் ஒரு மணி நேரம் கொள்கை விளக்கம்

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமெரிக்கத் தூதர் திரு. ஜோன்.எச்றீட் அவர்களும்அமெரிக்கத்தூதரகத்தின் முதல் செயலாளர் (அரசியல்பிரிவு) கென்னத் ஸ்கொட் (யூனியர்) அவர்களும் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசனையும் தமிழீழ விடுதலை அணியைச் சேர்ந்த திரு. ஈழவேந்தனையும் சந்தித்து சுமார் ஒரு மணிநேரமாக இலங்கைத் தமிழர்பிரச்சினைகள்சம்பந்தமாக உரையாடினார்கள்.

சுபாஷ்டூரிஸ்ட் விடுதியில் 11.5.82இல் அமெரிக்கத் தூதர் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கியபிரமுகர்களுக்கு ஓர் சிறப்பு விருந்தளித்துக் கௌரவித்தார்.இந்நிகழ்ச்சி முடிவடைந்த பின் திரு. கோவைமகேசனும் [illegible] தனும்அமெரிக்கத்தூதரைத் தனியாகச் சந்தித்து. ஈழத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாயங்களையும்தமிழீழ சுதந்திரம் கோருவதற்கான வரலாற்று,சமகால நிகழ்ச்சிகளையும் எடுத்துரைத்தபோது, அவற்றை மிகவும் அக்கறையோடும் அனுதாபத்தோடும் அமெரிக்கத் தூதர் செவிமடுத்தார்.

இதன்பின் அமெரிக்கத் தூதரக முதலாவது (அரசியல்) செயலாளர் கென்னத் ஸ்கொட்டுடன் சுமார் ஒரு மணி நேரம் திரு. கோவை மகேசனும், ஈழவேந்தனும் உரையாடினர். இளைஞரான திரு; ஸ்கொட்டுக்கு தமிழர் பிரச்சினை முழுவதும் தெளிவாகத் [illegible] அப்போது [illegible] அடைந்தது.

தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்பட்ட சம்பவங்கள், தமிழீழம் கோரும் நிலை தோன்றியமை,தமிழீழ விடுதலைப் போராளிகளிடையே இன்று ஏற்பட்டுள்ள தீவிரவாத—மிதவாதமுரண்பாடுகள், ஆகியவைபற்றி அக்கறையுடன் அவர்செவிமடுத்தார்.

எந்த ஒரு நாட்டுக்கும் அமெரிக்காஉதவி வழங்குவதற்குமுன்அந்நாட்டில்மனித உரிமை பேணப்படுகிறதா என்பதை அறிந்தே உதவி வழங்குவதாகவும், அமெரிக்காவழங்கும் உதவி எவ்விதம் செலவிடப்படுகிறதுஎன்பதைத் தாம் கண்காணித்து வருவதாகவும் ஒரு கட்டத்தில் திரு. ஸ்கொட் சுட்டிக் காட்டினார்.

தமிழீழம் பிரிந்தால் பொருளாதாரத் தன்னிறைவுடன்வாழமுடியுமா என்று திரு. ஸ்கொட் ஒரு கட்டத்தில் கேட்டபோது, இன்று சிறீலங்கா பொருளாதாரத் தன்னிறைவுடன் வாழுகிறதா? என்று பதில் அளித்த கோவைமகேசன்.சிறிலங்கா வெளிநாட்டுதவி பெற்று தனது நாட்டை வளப்படுத்த முடியுமானல் தமிழீழத்தால் ஏன் முடியாது என்று கேட்டார்.

சுதந்திரன் உங்களுக்கு கிடைக்கவில்லையா?
உடனே
ரூபா 180 செலுத்தி சந்தாதாரராகுங்கள் உங்கள் பிரதியை உறுதி செய்து கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப்பார்-1

# இலட்சிய இதயங்களுக்கு அமிர் அண்ணை எழுதுகிறார்

"கடந்த முப்பது ஆண்டுகளாக பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களுடன் ஒத்துழைத்தும், ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் பலசெய்தும் நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம். கசப்பான இந்த அனுபவங்களின் பின்னரே சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ முடியாது. பிரிந்துதனித்துசுதந்திரத்தமிழ்ஈழத்தை நிறுவி நம்மை நாமே ஆள வேண்டும் என்றஇறுதியான மாற்றமுடியாத முடிவுக்கு வந்திருக்கிறோம். நாம் சூடு கண்ட பூனைகள். எனவேஇனியும் ஒப்பந்தங்கள் செய்து உடன்படிக்கைஎழுதிஏமாறுவதற்கோ ஏமாற்றப்படுவதற்கோ நாம் தயாராக இல்லை. எங்கள் முடிந்த முடிவான தமிழ்ஈழ இலட்சியத்தை நோக்கி நாம் நமது பயணத்தை தொடர்ந்து நடத்துவோம். எந்த ஒரு சிங்கள அரசாங்கமாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளைநிறைவேற்றுவதற்கு தயாராக இருந்தால் அதைநடைமுறையில் செயலில் செய்து காட்டட்டும்; **சிங்களவர்களுடன் உடன் படிக்கைகள் எழுதி மீண்டும் ஒருமுறை ஏமாறுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இல்லை!"**

கடந்த 25,30 ஆண்டுகாலமாகசிங்களவர்களுடன்சமர்தானமாகவும்சுயமரியாதையுடனும் சேர்ந்து வாழ்வதற்கு தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் எடுத்த முயற்சிகள் அனைத்தும் சிங்களவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்பட்டுவிட்டன. ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள்யாவும்கையெழுத்திட்டமை உலர முன்னரே சிங்களவர்களால் கிழித்துவீசப்பட்டன.

1957 ஆம் ஆண்டு தந்தை செல்வாவுடன் காலஞ்சென்ற பண்டாரநாயகா செய்து கொண்டஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது

1960 ஆம் ஆண்டு யூலைத் தேர்தலுக்கு முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தமிழரசுக் கட்சியுடன் செய்து கொண்டஒப்பந்தம்தேர்தல் முடிந்து சிறீலங்காசுதந்திரக் கட்சி பெரும்பான்மைபலத்துடன் ஆட்சிபீடமேறியதும் தூக்கி வீசப்பட்டது. நாம் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோம்.

1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அக்கட்சியின் தலைவராக இருந்த காலஞ்சென்றபிரதமர் டட்லி சேனநாயக்காவினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

புதிய அரசியல் சட்டம் எழுதப்பட்ட வேளையிலே (1972) தமிழினத்தின் உரிமைகளை அதிலே இடம்பெறச் செய்வதற்கு நாம் எடுத்த முயற்சிகள் எதுவும் சிங்கள ஆட்சியாளரின் திமிரினால் நிராகரிக்கப்பட்டன புதிய அரசியல் சட்டம் வந்த பிறகுகூட ஆறு அம்சத் திட்டத்தின் அடிப்படையில் அதைத்திருத்தவேண்டுமென்று கோரிக்கை விடுத்து பிரதமருடன் அது பற்றிப் பேசத்தயாரென்றும் 1972 ஆம் ஆண்டு அறிவித்தோம். அதையும் அதிகாரத் திமிர் பிடித்த ஆளுங்கட்சி உதாசீனம் செய்தது.

**இன்றுநாம் ஒரு முடிவான நிலைக்கு வந்துவிட்டோம். காங்கேசன்துறை இடைத் தேர்தலில்மக்கள் அங்கீகாரம் பெற்று வட்டுக்கோட்டைமாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஈழத் தீர்மானத்தின் அடிப்படையில் நாம்பயணம்நடத்தத் துணிந்து விட்டோம். இதில் இனி பின்வாங்குவதற்கோ விட்டுக் கொடுப்பதற்கோ இடமில்லை. உலகில் தமிழனுக்கென்றோர் தனிநாட்டைத் தோற்றுவிக்கும் பெருமைக்குரிய பணிகாலத்தினால்இன்று நம்மீது சுமத்தப்பட்டிருக்கிறது!**

**இந்தநிலையில்இனியும் எந்தச் சிங்கள அரசுடனும் ஒப்பந்தங்கள் உடன் படிக்கைகள் செய்துமீண்டும்மீண்டும் ஏமாறவோ, ஏமாற்றப்படவோ நாம் தயாராக இல்லை-நமக்கு இதிலே நல்ல அனுபவமிருக்கிறது.**

எந்த ஒரு சிங்கள அரசும் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற விரும்பினால், நடைமுறையில் அதற்குரிய சட்டங்களை கொண்டுவந்து செயற்படுத்தட்டும்! நாமாகச் சென்று எந்த ஒப்பந்த வலைக்குள்ளும்இனியும்விழப் போவதில்லை!



**எப்படிப் பார்த்தாலும் தமிழன் தன்னுடைய இழந்ததமிழ் ஈழ அரசை மீட்டு அமைப்பதேநமக்குள்ளஒரேவழி**

**—அண்ணன்அமிர்**

## தமிழீழம் இடம்பெறாது!

'தவிகூட்டணியின் அடுத்த பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழம் இடம்பெறாது. 1977இல் அதற்கு மக்கள் வாக்களித்து விட்டனர்.'

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் செங்கதிர் வெளியீட்டு விழாவில் கூறியுள்ளார்,

# தமிழினம் 15 ஆண்டுகள் பின்தள்ளப்பட்டுவிட்டதா?

**1965**—1970 காலகட்டம், தமிழரசுக் கட்சியினதும், தமிழர் விடுதலைப்போராட்டத்திலும் கறைபடிந்த ஓர் கால கட்டமாகும். மாவட்டசபை கிடைக்கும் என்றஅங்கலாய்ப்பில்சிறிமா—சாத்திரிஒப்பந்தஅமுல்சட்டம் அடையாள அட்டைகள்சட்டம் போன்றதமிழின விரோதச் சட்டங்களுக்கெல்லாம் தமிழரசுக்கட்சி கை தூக்கிக் கொண்டிருந்த காலம். யாழ்ப்பாணத்திற்கு டட்லி சேனநாயகாவையும் ஜே-ஆர்; ஜெயவர்த்தனவையும், முறையே தமிழ் காங்கிரசும், தமிழரசுக்கட்சியும் போட்டி போட்டுக் கொண்டு வரவழைத்து தேரில் வைத்து இழுத்த அடிமைக்காலம்- கட்சிக்குள் புகுந்த தீய சக்திகள் இவ்வாறு செய்தபோதெல்லாம் கட்சிப் பெரும்பான்மைத் தீர்வுக்குக் கட்டுப்படுவது என்ற தமது ஜனநாயகக் கோட்பாட்டின்படி இவற்றையெல்லாம் தந்தைசெல்வாவும்,மௌனமாக அனுமதித்துக் கொண்டிருந்த காலம், தந்தது உன்தனை, கொண்டது என்தனை சங்கரா ஆர்கொலோ சதுரர்" என்றுஜே-ஆர்.ஜெயவர்த்தனவைப்பார்த்து திருவாசகம்பாடியகாலம்.

இன்றைக்கு 15 ஆண்டுகள் கழிந்து—தன் தவறைத் தமிழரசுக்கட்சியும் உணர்ந்து திருந்தி தமிழீழ திருநாட்டின் விடுதலைக்குத் தமிழ் மக்களிடமிருந்து ஆணைபெற்று ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து சொத்து சுகமிழந்து விடுதலைக்காக இளைஞர்கள்சிறைச்சாலை சித்திரவதைகளையும், ஏன் உயிர் அர்ப்பணிப்புக்களையும் செய்து கொண்டிருக்கும் காலமிது.

ஆனால்கூட்டணியின்'செங்கதிரோ' இன்றைய நிலையை 15 ஆண்டுகாலம் பின்தள்ளி 1967ஆம் ஆண்டுக்காலகட்டத்துடன் ஒப்பிட்டிருக்கிறது.

ஆம்அது உண்மைதான், அன்று யூ என்,பியை எப்படி தமிழரசுக்கட்சியின்சில தரகர்களும் முதலாளித்துவவாதிகளும் சிக்கெனப் பிடித்துஇனத்தின் வரலாற்றில் வீழ்ச்சியை ஏற்படுத்தினார்களோ—அதைவிடப் பயங்கரமான வீழ்ச்சியை இன்றைய கூட்டணி—யூ-என்.பி-உறவு தமிழினத்துக்கு ஏற்படுத்திவிட்டது,

எம்மைப் பொறுத்தவரை இன்றையநிலை, 1965 ஆம் ஆண்டு காலகட்டத்துக்குமட்டுமல்ல— 1947-- 1956ஆம் ஆண்டுக்கால கட்டத்துக்கே சென்று விட்டதை நாம் உணர்கிறோம். சிங்கள மந்திரிகளை தமிழீழத்துக்கு அழைத்து மாலை சூட்டி விருந்துகொடுத்து,அவர்களிடம் அற்பசலுகைகளையும் அபிவிருத்தியையும் பாலம் பள்ளிக்கூடங்களையும் மன்றாடிப் பெறுகின்ற ஒத்துழைப்பு அடிமை அரசியலுக்குள் கூட்டணி விழுந்து விட்டதுதான் தமிழ் மக்களுக்கு கவலையை ஏற்படுத்துகிறது-

தந்தை செல்வா கட்டி வளர்த்துவந்த எதிர்ப்புப் போராட்டமும் எதிர்ப்புணர்வும் அழிக்கப்பட்டு விட்டது- மீண்டும் இனி ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை சரணாகதி அரசியல் பாதை தானா?


# சுடர்

சித்திரை ஆண்டு மலர் பாரதி சிறப்பிதழாக அதிக பக்கங்களுடன் விற்பனையாகிறது.

## இவ்விதழில்

பாரதி நினைவு சிறுகதைகள், பாரதி பற்றிய கட்டுரைகள், குறமகளின்பேட்டி, நாவேந்தன், செம்பியன் செல்வன், நா. சுப்பிரமணியம் ஆகியோரின் கருத்துக்களுடன், பல புதிய தகவல்களும் அரசியற் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன.

வாசிக்கத் தவறாதீர்கள்
பிரதி ஒன்றின் விலை ரூபா 2-00 மட்டுமே

நிர்வாகி.
சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு— 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா நினைவாலயம் கூட்டணியின் குடும்பச் சொத்தா?

தந்தை செல்வா ஈழத்தில் வாழும் நாற்பது இலட்சம் தமிழ் பேசும்மக்களுக்கு மட்டுமன்றி உலகடங்கிலும் வாழும் ஏழு கோடித் தமிழருக்கும் சொந்தமானவர். உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்கள் தமது இன்னல்கள் தொலைய தந்தை செல்வாகாட்டியநடையிலே பீடு நடைபோடும்ஈழத்து விடுதலை விரர்கள்தமிழீழம் அமைப்பார்கள் என்று நம்பி ஈழ விடுதலைப் போருக்குஆதரவுவழங்கி வருகிறுர்கள்.

ஆனுல், சில குள்ள நரிகள் தமது சொந்த நலன்களைக் காத்துக்கொள்ள விடுதலைப் போராளிகளையும் ஈழத் தமிழரையும் அச்சமூட்டிப்பகைவனுக்குப் பணிய வைக்கும் 'திருத் தொண்டில்' ஈடுபட்டிருக்கிறுர்கள். தமிழீழம் அமைப்போம் என்று வானதிர முழங்கிவிட்டு-தந்தை செல்வா வழியில் தடம் புரளாது செல்வோம் என்று உறுதியளித்து விட்டுப்பாராளுமன்றம் சென்றவர்கள், இன்று ஸ்ரீலங்கா ஏகாதிபத்திய அரசின் விசுவாசமுள்ள ஆளுநர்களாகத் தொகுதி தோறும் பணியாற்றி வருகிறுர்கள். அந்நிய ஏகாதிபத்தியத்தில் எட்டப்பர்களும் காக்கை வன்னியர்களும் மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டது போல இவர்களும் மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு விடுதலைஉணர்வை அழித்து வருகிறுர்கள்.

விடுதலை உணர்வை மழுங்கடித்து நிரந்தர அடிமைத்தனத்துக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கும் பாராளுமன்ற அணிக்கு கட்டளை வழங்குவதில் ஈடுபட்டிருப்பவர்களில்ஒருகாலத்தில்கல்வித்துறை விரிவுரையாளராக இருந்த பெரியார் முன்னணி வகிக்கின்றுர். தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவராகவும் இருந்து கொண்டு தமிழினத்தை ஐக்கிய இலங்கை அடிமைப் பொறியில் விழுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறுர்.

தந்தை செல்வா நினைவாலயம் திறந்தவெளியில்அமைக்கப்பட்டுள்ளது. அடைப்புக்களும் தடுப்புக்களுமின்றி அனைவரையும் 'வருக வருக' என்றுஅழைத்தபடி வானுறவோங்கி வளர்ந்துநிற்கிறது அந்தக் கோபுரம். தந்தை செல்வா எப்படி முழுத் தமிழினத்துக்கும் சொந்தமோ அப்படியே அந்தநினைவாலயமும் அனைவருக்கும் சொந்தம். இந்த உண்மைகாந்தீயவாதி என்றுபெருமைபேசும் 'பேராசிரியர்'க்குப் புரியவில்லை. தீண்டாமைஒழிப்பே காந்தீயத்தின் உயிர்நாடி. அதுவே தந்தையின் உயர் நெறியுமாகும்.

இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளாத 'பேராசிரியர்' தந்தை செல்வா நினைவாலயத்துக்குட்புகச் சிலருக்கு உரிமையில்லை என்றும்அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்றும் கூறியும் எழுதியும் வருகிறுர்.

கடந்த ஆண்டு வைத்திய கலாநிதி ச. அ. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் அமைதிப் பிரார்த்தனை செய்ததை ஆட்சேபித்து பேராசிரியர், கலாநிதி அவர்களுக்குக் கடிதம் எழுதினுர். இந்த ஆண்டும்தம்முடையமுன்னனுமதியின்றி அங்கு வந்தது தவறு என்றும் இனிமேல் இப்படிச் செய்தால்கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயமுறுத்தினுராம் பேராசிரியர்.

தந்தை செல்வா நினைவுநிலை பேராசிரியரின் முதுசொத்தோ சீதனமோ அல்ல. அல்லது அவரைத் தவருன வழியில் செலுத்திக் கொண்டிருக்கும் (உண்மையில் பழைய யூ.என்.பீக் காரராகிய பேராசிரியர் தான் விடுதலைப் பாதையில்சென்றவர்களைத்திசைதிருப்பிக்கொண்டிருக்கிறுர்) அரசியல் வாதிகளதுசொத்துமல்ல. தந்தை செல்வா நினைவாலயம்- அது தமிழர்களின்சொத்து -அவர்களுக்கு உரியது- பேராசிரியர் மக்களின் உரிமையைத் தடுக்க முனைந்தால் அதனை எதிர்த்து தமது உரிமையை நிலைநாட்ட மக்கள்போராட்டம் நடத்துவதற்குத்தயங்க மாட்டார்கள் என எச்சரிக்க விரும்புகிறேம்-

சிங்கள ஏகாதிபத்தியத்தின்சூத்திரதாரிகள்-தந்தை செல்வாவின் கொள்கைகளுக்கு எதிரான அந்நியர்கள் கொடி, குடை, ஆலவட்டம், ஆள், அம்பு, ஆணை, அடிமைகளோடுவந்துசெல்வாவுக்கு அஞ்சலி செலுத்திய போதெல்லாம் கண்மூடி மௌனியாக இருந்த பேராசிரியர் விடுதலை விரும்பிகள் தந்தை செல்வாவுக்கு அஞ்சலிசெலுத்தச் செல்லும் போதெல்லாம் 'குரைப்பது' அவரது சிறுமையை—சின்னத் தனத்தையே—காட்டுகிறது-

'பேராசிரியர்' எதிர்காலத்திலாவதுநல்லவராகநடந்து கொள்வாரெனத் தமிழீழம் எதிர் பார்க்கிறது-

தமிழ் நாட்டின்தலைநகராகிய சென்னையிலுள்ளபேரறிஞர் அண்ணு நினைவாலயம், எப்படித் திராவிட இயக்கங்கள் அனைத்துக்கும் சொந்தமோ, அதே போல தந்தையின் நினைவாலயம், தமிழீழ விடுதலையை விசுவாசிப்பவர்கள்அனைவருக்குமே சொந்தமானது-

—கே.கே.எஸ்.

# காலராக்கிருமி- அடக்குமுறை ஆட்சியின் படைக்கருவி?

**Aquanotes**

Sea Grant College Program Louisiana State University USPS 933-920 Vol. 10 Issue 4 November 1981

## Vibrio cholera:
## A New Understanding

by Sally Kuzenski

In August of 1978, 11 cases of cholera in Louisiana produced inch-high newspaper headlines across the nation and the resulting shock waves ran through the southern seafood industry Though the collapse of the crab industry was predicted, industry people, public health officials, and university researchers were able to quell the hysteria

In October of 1981, another 13 cases occurred, this time on an offshore platform in Texas waters and apparently from a contaminated water supply. Fortuitously for Baton Rouge media people, the latest outbreak occurred during a Sea-Grant-sponsored meeting at LSU on "Vibrios in the Environment." Vibrio is the microbial family to which cholera belongs, and many of the scientists attending were reporting on research initiated during the 1978 scare.

Science has come a long way in three years Delegates were loaded with new evidence for the press that cholera's centuries-old reputation as a ravaging killer may no longer apply. With modern standards of health, sanitation, nutrition and medical practice, cholera can be regarded as a treatable disease whose symptoms can range from nondetectable to the more severe cases requiring medical treatment. The scientists also exonerated the nation's seafood industry

"Not a single case of diagnosed or suspected cholera has EVER been connected to factory-processed seafood," said Dr. Rita R. Colwell, one of the nation's leading cholera experts and an organizer of the Louisiana meeting. University of Maryland seafood technologist Michael Papar[illegible] concurred, maintaining that the seafood industry is comfortable with present processing formulas

The implications to the seafood industry were one of six areas explored by the meeting. Other sessions considered the epidemiology and serol

அன்று தமிழாராய்ச்சி மாநாடு; இன்று கச்சதீவுக்கத்தோலிக்கத்திரு விழா; அன்று சுதந்திரக் கட்சி; இன்று யூ.என்.பி. அன்றும் அடக்குமுறை ஆட்சி; இன்றும் அடக்குமுறை ஆட்சி. மாநாடு தமிழ் மண்ணில்; திருவிழாவும் தமிழ் மண்ணில். மாநாட்டுக்குத் தமிழ் நாட்டுத் தமிழர் வருகை; கச்சதீவு உற்சவத்துக்கும் அப்படியே.

இரண்டையும் தடைசெய்யப் பயமுறுத்தியதுகாலரா- வாந்திபேதி. வாந்திபேதிஅடக்குமுறை அரசின் படைக்கருவி. தமிழரைப் பாதுகாக்கிறேம் என்றபோர்வையில் தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகள் தடைசெய்யப்படுகின்றன. தமிழர் கடல் தாண்டி ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது தடைசெய்யப்படுகிறது"வாந்திபேதியே காரணமாகும்-

காலராவைக் காரணம் காட்டி தமிழாராய்ச்சிமாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தாமல் செய்ய முடியவில்லை. காரணம் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தலைமை உறுதியான உயர்ந்த உள்ளம் கொண்டோரிடம்இருந்தது. காலரா உண்டோ, இல்லையோ, மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது.

காலராவைக் காரணமாகக் காட்டி கச்சதீவுத் திருவிழாவைத் தடை செய்தபோது, ஆட்சி தமிழரிடமில்லை. பாக்கு நீரிணையில் இருபக்கமும் உள்ள தமிழர்களால், காலராவை அடக்க முடியாமைக்குக் காரணம்- கச்சதீவு விழாக்களை முடியாமைக்குக் காரணம்—இருநிலத் தமிழர்களும், தமிழர் அல்லாதவர்களால் ஆளப்படுவதுதான்.

இனிமேல் முடியாது தமிழர்களே தட்டிக்கேளுங்கள். காலரா கொடுமையானநோயல்ல, கொல்லும் வலிமைகளை முறியடிக்கும் ஆற்றல் மருந்துகட்கு உண்டு. இதை இதோ அறிவியலாளர் கூறுகின்றுர்கள்; மருத்துவர்கள் கூறுகின்றுர்கள். அவர்கள் கூறுவதையே இக்கட்டுரையின் மேலேயுள்ள "போட்டோ ஸ்ராட்" படம்எடுத்து விளக்குகிறது.

என்வே தமிழர்கள் அஞ்ச வேண்டாம்; அடக்குமுறையாளர்கள் வேறு படைக்கருவிகளைத் தேடுவார்கள். காலராகடந்தகாலத்தின்படைக்கருவி. தமிழ் மக்களைத் [illegible]

## நெற்றிக்கண்ணை...

—2-ம் பக்கத் தொடர்

சுதந்திரன் ஆசிரியரைத் தமிழரசுக் கட்சியிலிருந்து விரட்டியடிக்கவில்லை.

சுதந்திரனுக்குப் பிறகு பாடம் புகட்டப் புதிய ஏடு ஒன்றைத் தொடங்கவில்லை-

மாருக மக்கள் குரலாக ஒலிக்கும் சுதந்திரன் கண்டனத்திலுள்ள மெய்ம்மையை உணர்ந்து கொண்டு பா-உக்களைஅழைத்துக்கண்டித்தார் இதுதான் செல்வாவின் அரசியல் நாகரிகம்-

'சுதந்திரனில் நான் சம்பளத்துக்காக மட்டும் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை. நான் ஏற்றுக் கொண்ட அரசியல் இலட்சியத்துக்காக என்னை நானே அழித்துக்கொண்டிருக்கிறேன்- வேறு பதவி கிடைக்காததினுல் பத்திரிகைத் துறைக்கு வந்தவனல்ல நான்- பத்திரிகைத் துறையில் பணியாற்றிட வேண்டுமென்றுசின்னவயதிலிருந்தே ஆசைப்பட்டுக் கொண்டிருந்தவன். பத்திரிகைத் துறையை வாஞ்சையுடன்நேசிப்பவன். அதுவும் நான் ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் இலட்சியத்துக்காக எனது மனச்சாட்சியை அடகுவைக்காமல் எனது பேனவைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இத்துறையில் ஈடுபட்டுள்ளதால் எனக்கு வாழ்க்கையில் சில பல கஷ்டங்களிருக்கலாம்: ஆனுல் அக் கஷ்டங்களுக்காக எனது இலட்சியப் பணியிலிருந்து பாதைமாறிடப்போவதில்லை —நான் ஏன் கைதியானேன் கட்டுரையில் (சுதந்திரன் 2-2-71)

நான் சுதந்திரன் ஆசிரியராக சம்பளத்துக்காக மட்டும் பணியாற்றுபவனுக இருந்திடின் நேரம் காலம் பார்க்காது எனது உடல் சுகவீனத்தைப் பற்றியும் கவலைப்படாது வேலைப்பழு அனைத்தையும் நானே தன்னந்தனியாகக் கடந்த சில ஆண்டுகளாகசுமந்துகொண்டிருக்கத் தேவையில்லையே-

இரவு பகலென்று கண் விழித்து என்னை அழித்துக் கொண்டு இருதிங்களாக சுதந்திரன் நாளேட்டை நடத்தியிருக்கத் தேவையில்லையே.

இந்த எனது இலட்சிய பற்றை உணராதவர்கள் பதவி கொடுத்து விலைக்கு என்னை வாங்கிட முயன்று தோற்றுர்கள்.

—சுதந்திரன் (2-2-71

--அடுத்த இதழில் முடியும்


## மில்க்வைற் நீல சோப்

குறைந்த செலவில் தூய வெண்மையை அளிக்கும்மில்க்வைற் நீல சோப் நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதியானது. மேலுறைகள் பரிசுக்கு உரியது.

ஒரு கட்டி ரூபா 1 | 50

அதன் மேலுறைகளை அனுப்பிப் பெறுமதியான காந்திசிலை, அழகிய துவாய், பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிஷ்கரித்த மாணவர்கள் 16பேர் கைது செய்யப்பட்டனர்

தடுப்புக் காவலிலுள்ள விமலராசாவை விடுதலை செய்யக் கோரி, பகிஷ்கரிப்பிலீடுபட்ட தமிழ் மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ரகுபதி, தர்மரத்தினம், ஆகியோரும், கிளிநொச்சியைச் சேர்ந்த பாடசாலை மாண்வர் வரதராசா, மற்றும் ஒருவரும், மட்டக்களப்பில் பல்கலைக்கழகமாணவர்கள், தியாகராசன், பிரபாகரன், இந்திரகுமார், முகைதீன், மன்சூர் ஆகியோரும்பாடசாலை மாணவர்கள் 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கூட்டணியின் புதி..

—1-ம் பக்கத் தொடர்

மைக்கும் நலனளிக்கும் எனும்உணர்வினை உருவாக்குவதில்நாம் இடைவிடாது கோரிவந்த இம்மாற்றம்வெற்றிகண்டுள்ளது.இவ்வதிகாரப்பரவலாக்கத்திற்கு சட்டவுருஅளிப்பதற்கான எத்தனங்கள் முன்பு எம்மால் மேற்கொள்ளப்பட்டன. அபிவிருத்திச்சபை அதிகாரச் சட்டத்தினை நெறிப்படுத்தி அதன் மூலம் அதிகாரமாற்றத்தில்ஒருதிருப்பு முனையை ஏற்படுத்திய பெருமை மேன்மைசால்ஜனதிபதியையேசாரும். யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையை ஏற்படுத்தியசட்டத்தைஉருவாக்கியமைக்கு, யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் தலைவர் என்றரீதியில் அரசாங்கத்திற்குஎனது நன்றியினைநான் தெரிவிக்க வேண்டியவனக இருக்கிறேன்''

இவ்வாறு யாழ், அபி. சபைத் தலைவர் தமதுகொள்கைப் பிரகடனத்தின் ஆரம்பத்திலே கூறியுள்ளார். திரு. நடராசாவின் பேற்படி பேச்சு தமிழீழ விடுதலை விரும்பிகளிடையே பலவித சர்ச்சைகளை எழுப்பியுள்ளன.

சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்றசோசலிசத்தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்பதற்கு மக்கள்கொடுத்த ஆணையை அடகு வைத்தே அபிவிருத்திச் சபையைக் கூட்டணிஏற்றுக்கொண்டுள்ளது என்கிற குற்றச்சாட்டு யாழ் அபிவிருத்திச்சபைத் தலைவரின் உரை மூலம் உண்மையாகிவிட்டது.

கூட்டணியின் கொள்கை இனி மாநில சுயாட்சிதானு?

சிறீலங்கா, தமிழீழம் என இருநாடுகளைக் கொண்டஒரு தீவு இலங்கை என்ற கோட்பாட்டைக்கைவிட்டு, இலங்கைமுழுவதையும் ஒரேநாடு என்பதைக் கூட்டணி இப்போது ஏற்றுக்கொண்டுவிட்டதா?

இணைப்பாட்சிக்கோரிக்கையைக்கைவிட்டு விட்டோம் சுதந்திர தமிழ்நாடு அமைப்பதே நமது இயக்கத்தின் ஒரே இலட்சியம் என்று சிங்கள நாடாளுமன்றத்தில் தந்தைசெல்வா விடுத்தபிரகடனத்திலிருந்து தந்தை செல்வா வின் வலது கரம் போல விளங்கியசு,நடராசா தடம்புரண்டு விட்டாரா?

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, திருமலை, மன்னர் என்று பிரதேசப்பிரிவினை பேசிக்கிடந்த தமிழ் மக்களை ஒன்றிணைத்து ஒரே தேசிய இனமாகக் கட்டியெழுப்பித் தமிழரசு கோரினுர் தந்தை செல்வா.

இன்று அபிவிருத்தி சபைகளின்மூலம், மறுபடியும், யாழ்ப்பாணம். மட்டக்களப்பு, வன்னி. மன்னர், திருகோணமலை,முல்லைத்தீவு அம்பாறை என்று தமிழ் பேசும்மக்களைக் கூறுபோட்டுப் பிரிக்கும் ஜே.ஆரின்திட்டத்துக்கு கூட்டணி பலியாகிவிட்டது,

தமிழ் மக்கள் 1977இல் தந்த தமிழீழ ஆணையை மாற்றுவதாக இருந்தால் அதே தமிழ் மக்களால் மட்டுமே முடியும் என்ற கூட்டணித்தலைமை இன்று மக்களைக் கேளாமல் ஆணையைக் கைவிட்டு விட்டதா?

இவ்வாறு விடுதலைஆர்வம் மிகுந்த தமிழ் மக்கள் குமுறுகிறுர்கள்-

## எதனை விதைக்கிறீர்களோ அதனை அறுவடை செய்வீர்கள்!

"தமிழ் மக்களாகியநீங்கள் எதனை விதைக்கின்றீர்களோ அதனையே நீங்கள் அறுவடை செய்வீர்கள், தமிழ் மக்களின் கஷ்டங்களை நான் மிகவும் உணர்கின்றேன்''

—அமெரிக்கத் தூதுவர் திரு. ஜோன். எச். றீட், யாழ்ப்பாணவரவேற்பில் கூறியது.

# கூட்டணி பெற்ற குழந்தையே தமிழீழ சுதந்திரப் பிரகடனம்

தனித் தமிழ் ஈழ அரசு ஒன்றை ஒருபக்கமாக சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்யும்கொள்கை,அண்மையில் தோன்றியதோ அல்லது அந்நியநாட்டில் உதயமானதோ அல்ல. சிறீலங்காவுடன்,பல தசாப்தங்களாக தன்மானத்தோடு இணைந்து வாழ்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் படுதோல்வியடைந்ததன் விளைவாக 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு ஒன்றிலேதான் இத்திட்டம் கருவாகியது. சுதந்திரத் தமிழீழப்பிரகடனத்தின்சிற்பிகள்,இன்றைய தமிழ்த் தலைவர்களே. தமிழர்களின் சுதந்திரத்துடன், தமக்குத்தொடர்பு ஏதுமில்லையென்று த.வி.கூ, தலைவர்கள், கூறுவதுஎப்படிப்பட்டதென்ருல், போலந்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் 'சோலிடாறிற்றி'' தலைவர் லெச் வலெசா,போலந்திலுள்ளசோலிடாறிற்றி தொழிற்சங்த்துக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்று கூறினுல் எப்படியிருக்குமோ அது போன்றதேயாகும். தமிழ்த் தலைவரால் அவ்வாருன ஓர் அறிக்கை வெளியிடப்பட்டதைவிளங்கிக் கொள்வதற்கு பெரியஆராய்ச்சிகள்எதுவும் தேவையில்லை. தமிழர்விடுதலைக்கூட்டணி ஸ்தாபிக்கப்பட்டதே—சுதந்திர இறைமையுள்ள தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்பது என்கிற ஒரேயொரு குறிக்கோளின் வாக்குறுதியின் அடிப்படையிலேதான்''

இவ்வாறு அமெரிக்க ராஜாங்கதிணைக்களம், காங்கிரஸ் உறுப்பினர் மாரியோ பியாஜிக்கு அனுப்பிவைத்திருந்த இலங்கைத் தமிழர் நிலைகுறித்த அறிக்கைக்கு விளக்கம்அளித்து,அமெரிக்க ஈழத்தமிழர் இயக்கம் அனுப்பிவைத்துள்ளபதில்கடிதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் சுதந்திர ஈழப் பிரகடனம் சம்பந்தமாக திரு. பியாஜிக்குஎழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது,

'இலங்கையில் சிங்கள—தமிழ் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் தூய்மையான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைமை திருப்தி தெரிவித்துள்ளது.

''வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்குப் பிரதியுபகாரமாக,தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைமை 1981 டிசெம்பர் ஒன்பதாம் திகதி ஜனதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவைச்சந்தித்து, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஈழத் தமிழ் அரசு ஒன்றை ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்த முயற்சியெடுக்கும் தமிழர்களுக்கும்தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எதுவித தொடர்பும், கிடையாது என்று உறுதியளித்து, அம்முயற்சியிலிருந்து தன்னை விலத்திக் கொண்டது......''


கெபிட்டி (கொட்டாஞ்சேனை) 2-வது வாரம்

தினசரி 3 காட்சிகள், சனி ஞாயிறு 4 காட்சிகள்

இப்பொழுது காட்சியளிக்கிறது!

ஜெய்சங்கர் — மனோரமா

தேங்காய் சீனிவாசன், எம்.ஆர்.,வாசு, சுபா,

மற்றும் பலர் நடித்த

பொன்வண்டு

(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய கொப்பி)

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) 8-வது வாரம்

தினசரி 3 காட்சிகள்!

இப்பொழுது காட்சியளிக்கிறது!

கௌரவ நடிகர்கள்

மக்கள் திலகம் நடிகர் திலகம்

எம்-ஜி-ஆர் சிவாஜி கணேசன்

மற்றும் ரஜனிகாந்த் கமலஹாசன், ஸ்ரீபிரியா, சிவகுமார், விஜயகுமார், சுகுமார், நாகேஷ், சிவச்சந்திரன், கே. ஆர். விஜயா, மஞ்சுளா, நடிகையர் திலகம் சாவித்திரி அசோகன்

—மற்றும் பலர் தோன்றும்—

நட்சத்திரம்

ஈஸ்ட்மன் கலர்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் ... வீதி, '15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1982ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org